செ.வெ.எண். 28/ஆகஸ்ட் தேதி : 12.08.2016

**தருமபுரி, காரிமங்கலம், அரூர் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட புழுதிக்கரை, வெதரம்பட்டி, அச்சல்வாடி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**






தருமபுரி, காரிமங்கலம், அரூர் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட புழுதிக்கரை, வெதரம்பட்டி, அச்சல்வாடி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.08.2016) நடைபெற்றது.

இம்முகாம்களில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்து 52 நபர்களுக்கும், இணையதள பட்டா மாறுதல் 15 பயனாளிகளுக்கும் வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதற்காக வெள்ளிக்கிழமை தோறும் வட்டங்கள் வாரியாக கிராமங்களை தேர்ந்தெடுத்து அம்மா திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. கிராம மக்கள் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு அட்டை மற்றும் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பதிவுபெற்ற உறுப்பினர் மற்றும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண உதவித்தொகை, விபத்து மரண உதவித்தொகை போன்றவை வழங்கப்படுகிறது. மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் ஏழை குடும்பங்களின் மருத்துவத்தை நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டு இலவச மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், சமூக நலத்துறையின் மூலம் மகளிர் திருமண உதவித் திட்டம், பெண்குழந்தை பாதுகாப்பு திட்டம், ஏழை மகள் திருமண உதவி திட்டம் போன்றவற்றை பெறுவதற்கு ஏதுவாக தமிழக அரசின் மின் ஆளுமை திட்ட சேவை மையம் தங்களது கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சேவை மையத்தில் தங்களுக்கு தேவையான சான்றிதழ்களை பெற்று கொள்ளலாம். மேலும் மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டணமில்லா தொலைபேசி எண். 1077 தங்களது கோரிக்கைகளை தெரிவித்தால் உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக அம்மா திட்ட முகாம்களில் பங்கேற்ற பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீரை வழங்கி புழுதிக்கரை பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் வீட்டிற்குச் சென்று குடும்ப அட்டையை பெற்று உணவு பொருள் பெறப்பட்ட விவரங்களையும், அரிசியின் தரத்தையும் ஆய்வு செய்து, பின்னர் புழுதிக்கரை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சமையற்கூடத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் முட்டைகளையும், மதிய உணவினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து அதனைத் தொடர்ந்து

இணையதளம் வாயிலாக ஆதார் அட்டை பதிவு செய்யும் பணி நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இம்முகாம்களில் கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, வட்டாட்சியர்கள் திரு. செல்வராஜ், திரு. வைரமணி, திருமதி. சித்ரா, கம்பைநல்லூர் பேரூராட்சி தலைவர் திரு. தனசேகரன், துணை தலைவர் திரு. கிருஷ்ணன், வார்டு உறுப்பினர் திரு. ஆதிமூலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி